மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*9 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு பூராவும் ஓடும் சர்க்கார் பஸ்களில் சட்டசபை அங்கத்தினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்கும் உத்தேசமுண்டா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

Arts College in Tiruttani

* 10 Q.—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an Arts College in Tiruttani Taluk, Chingleput district from the next academic year 1967–68?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the fact that there are about 30 high schools in the Tiruttani taluk and about 30,000 students are coming out of those schools successfully after passing the S.S.L.C. Examination every year and in view of the fact that most of them migrate to the Andhra University because they are denied seats in the Madras City Colleges, will the Government consider the possibility of opening an Arts College there provided the Devasthanam of the Tiruttani Temple or the public come forward to contribute money for the starting of the college?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : திருத்தணிப் பகுதியில் இருந்து ஒரு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இது வரை வந்ததாகத் தெரியவில்லை. அங்கு ஒரு கல்லூரியை வைக்க வேண்டுமென்றால் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயைச் சேர்த்துத் தருவார்களேயானால் அரசாங்கம் அங்கு ஒரு கல்லூரியை வைக்க முயற்சி எடுக்கும். முறைப்படி அவர்கள் விண்ணப்பத்தைக் கொடுப்பார்களேயானால் கவனிக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புது விடுதி

*11. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டப்படும் தங்கும் விடுதி எப்போது திறக்கப்படும்?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர்கள் தங்கும் புதிய விடுதி கட்டும் வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. இவ்வேலை இவ்வாண்டு இறுதிக்குள் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் இக்கட்டிடத்தின் தென் பகுதியில் சுமார் 65 அறைகள் கட்டி முடித்துவிட முடியுமென்று நம்புகிறோம்.

திரு. முனு ஆதி : அன்டை மாநிலத்தில் சட்ட மன்றம் நடக்கிறபோது உறுப்பினர்களுக்கு விடுதிகள் அறைக்கான கட்டணம் வசூலிப்பதில்லை. அந்த நிலையை நம்முடைய அரசாங்கமும் கடைப்பிடிக்குமா ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இல்லை; இனிமேல் அது பரிசீலிக்கப்படலாம்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் புதிய ஹாஸ்டல் கட்டடத்தில் ஒவ்வொரு ரூமுக்கும் டெலிபோன் வசதி, மெம்பர்களுடைய கார்கள் தங்குவதற்கான ஷெட்டுகள் வசதி ஆகியவற்றையும் இதிலே அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : நிதி வசதி இடம் கொடுக்குமானல் செய்யலாம். போகப் போக பரிசிலிக்கப்படும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இந்தப் புதிய கட்டடத்தில் எத்தனை அங்கத்தினர்கள் தங்கத்தக்க அளவுக்கு அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் புதிய கட்டடத்தில், தனி அறைகள் 172, இரண்டு பேர் தங்கக் கூடிய அறைகள் 28, சைவ உணவு சாப்பிடுவதற்கு ஒரு இடம், அசைவ உணவு சாப்பிடுவதற்கு ஒரு இடம், லிப்டுகள் 4, விருந்தினர் தங்கும் அறைகள் 3, காரேஜஸ் 16, நூல்நிலையம் 1, லாண்டரிக்கு 1, சலூனுக்கு 1—என்ற வகையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

Nationalisation of bus transport.

* 12 *Q.*—THIRU. K. VINAYAKAM : THIRU. V. K. KOTHANDARAMAN : THIRU. K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalise the bus transport in the State;

(*b*) if so, how is it proposed to be implemented; and

(*c*) in what stages?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : (அ & இ) சென்னை மாநகரின் பஸ் போக்குவரத்தும் வெளியூர்ப் பகுதிகளில் ஒருசில பஸ் வழித் தடங்களும் (route) ஏற்கெனவே தேசியமயமாக்கப் பட்டுள்ளன. இம்மாநிலத்தில் பஸ் போக்குவரத்தை மேலும் தேசியமயமாக்குவது பற்றித் தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது; இப்போதும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.